ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2290/33 - 2022 ජූලි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.28

*2290/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

*ச. வ.பி. 277/40*

**(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டம்**

*33 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்*

(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி அனுர குமார மனதுங்க ஆகிய நான், காணி ஆணையாளரின் அங்கீகாரத்துடன், இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரச காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் "தொல்பொருளியல்சார் ஒதுக்கிடம்" ஒன்றாக இருத்தல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**அனுர குமார மனதுங்க,**
தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி.

கொழும்பு,
*2022, யூலை 18.*

1A - G 37141 — 08 (2022/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**மாமடுவ வரலாற்றுக்கு முந்திய - ஆரம்ப வரலாற்று மயானக் கட்டிடத்தொகுதியில் தொல்பொருளியல்சார் நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடப்பரப்பு**

நிலஅளவையாளர் தலைமையதிபதியின் 5 ஆம் இலக்க இறுதி இடவியல்பு விளக்கவிவர வரைபடத்திலானதும் 2019.10.16 ஆந் திகதியிடப்பட்டதும் குறைநிரப்பி இல. 11 மற்றும் 13 ஆம் இலக்கத்தாளில் 336 ஆம் இலக்கக் காணித்துண்டம் எனக் குறித்துக்காட்டப் பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், இக்குறைநிரப்பி 2019.10.22 ஆந் திகதியன்று வவுனியா மாவட்டச் சிரேட்ட நில அளவைகள் கண்காணிப்பாளர் பீ.எல்.வை. செனவிரத்ன அவர்களினால் நில அளவையாளர் தலைமையதிபதியின் சார்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இக்காணித்துண்டு பின்வரும் காணிப் பரப்புகளைக் கொண்டுள்ளதுடன் வடமாகாணத்திலுள்ள வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்குப் பிரதேச செயலகப் பிரிவில் C 213 D அக்போபுர கிராம அலுவலர் பிரிவில் அக்போபுர கிராமத்தில் அமைந்துள்ள மாமடுவ வரலாற்றுக்கு முந்திய - ஆரம்ப வரலாற்று மயானக் கட்டிடத்தொகுதி தொல்பொருளியல்சார் நோக்கங்களுக்காக ஒதுக்கவும்படுகின்றது :

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | காணித்துண்டம் இல. 337, பாதை (காணித்துண்டம் இல. 337), 337 பாதை (காணித்துண்டம் இல. 337), 337 மற்றும் 14; |
| கிழக்கில் | : | காணித்துண்டங்கள் இல. 14, 337, 333, 337 மற்றும் வீதி (பிரதேச சபை) (காணித்துண்டம் இல. 337); |
| மேற்கில் | : | காணித்துண்டம் இல. 337; |
| தெற்கில் | : | காணித்துண்டம் இல. 337 மற்றும் வீதி (பிரதேச சபை) (காணித்துண்டம் இல. 337). |

பரப்பளவில் காணியின் இருபத்தாறு ஏக்கர், இரண்டு றூட் இருபத்தேழு பேர்ச் (26ஏ. 2றூ. 27.0பே.) (10.7922 ஹெக்டேயர்கள்).

EOG 07- 0160

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.